2nd November 1966]

(6) விதைகளுக்கு மருந்து முதலியன தெளித்துப் பாது காத்தல் (சாதாரணப் படம்).

(7) நெற்பயிரைத் தாக்கும் நோய்கள் (சாதாரணப் படம்).

(8) சேமித்து வைத்த விளைபொருள்களைத் தாக்கும் நோய்கள் (சாதாரணப் படம்).

(9) உருளைக்கிழங்கு பின்கருகல் நோய், முன்கருகல் நோய், நீண்டுருண்ட புழுக்காளல் ஏற்படும் நோய் golden namtode (சாதாரணப் படம்).

திரு. வை. சங்கரன் : இந்தப் படங்கள் கிராமப் பகுதியில் உள்ள மக்களுக்குப் போட்டுக் காட்டப்படுகின்றனவா? காட்டப்படுகின்றன என்றால் எந்த எந்த இடங்களில் போட்டுக் காட்டப்பட்டிருக்கிறது? இல்லை என்றால் இனியாவது கிராமப் புறங்களில் போட்டுக்காட்ட நடவடிக்கை எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : ஏற்கனவே எடுக்கப்பட்ட படங்கள் வட்டார ப்ளாக்குகளில் போட்டுக் காட்டப்படுகின்றன. தஞ்சை, திருநெல்வேலி, மதுரை போன்ற மாவட்டங்களில் காட்டப்பட்டிருக்கிறது. மேலும் எல்லா மாவட்டங்களிலும் போட்டுக்காட்ட ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

அரிசன கிறிஸ்தவர்கள்

* 320 **கேள்வி.—திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : கனம்** உள்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நமது நாட்டில் ஆதி திராவிடர்களாக இருந்து மதம் மாறிய கிறிஸ்துவர்களுக்கு (Harijans), சர்க்கார் கொடுக்கும் சலுகையில் மத்திய சர்க்கார் ஓர் கொள்கையும், மாநில சர்க்கார் வேறு ஒரு கொள்கையும் வைத்திருப்பதற்குக் காரணங்கள் யாவை?

(இ) இரண்டு கொள்கைகளும் ஒருங்கிணைய நமது சர்க்கார் மத்திய சர்க்காருக்கு ஏதாவது வேண்டுகோள் விடுத்திருக்கிறதா?

(உ) ஆம் எனில், அதன் விவரமென்ன?

கனம் திரு. பூ. கக்கன் : (அ) 1950-ஆம் ஆண்டு அரசியலமைப்பு (ஹரிஜனங்கள்) ஆணையின் (இது பின்னர்த் திருத்தியமைக்கப்பட்டது) 3-வது பாராவின்படி இந்து மதம் அல்லது சீக்கிய மதம் அல்லாத வேறு மதத்தைச் சேர்ந்த எந்த நபரும் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவராகக் கருதப்படமாட்டார். இந்திய அரசினர் கொள்கை அரசியலமைப்பை அடிப்படையாகக் கொண்டது.

ஹரிஜன வகுப்பிலிருந்து மதம் மாறிய நபர்கள் மாநில அரசாங்கத்தால் "உதவி பெறத் தக்க பிற வகுப்பினர்" என்று வகைப் படுத்தப்படுகின்றனர்.

[2nd November 1966

(இ) "பின் நிலையில் உள்ள பிற வகுப்பினர்களுக்கு" சாதாரணமாகக் கொடுக்கப்படும் சலுகைகள் மதம் மாறிய ஹரிஜனங்கள் கல்வியிலும் பொருளாதார நிலையிலும் பின் தங்கிய நிலையில் இருக்கும் வரையில் அவர்களுக்கும் கொடுக்கப்படவேண்டும் என்று இந்திய அரசு ஏற்கனவே இம்மாநில அரசாங்கத்துக்குத் தெரிவித்துள்ளபடியால், இந்திய அரசுக்கு இதுபற்றி எவ்விதமான முறையீடும் செய்யப்படவில்லை.

(உ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, மாநில அரசாங்கத்தில் மதம் மாறிய ஹரிஜனக் கிறிஸ்துவர்களுக்கு எல்லாச் சலுகையும் தருகிறார்கள். கல்விச் சலுகை, பொருளாதாரச் சலுகை எல்லாம் அளிக்க வேண்டும் என்று ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். மத்திய சர்க்கார் அளிக்கிற சலுகைகளும் இவர்களுக்குக் கொடுக்கப்பட்டால் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : மத்திய சர்க்காரைப் பொறுத்தவரையில் அரசியல் அமைப்புச் சட்டத்திலேயே மதம் மாறிய ஹரிஜனக் கிறிஸ்துவர்களுக்குக் கொடுக்க முடியாதபடி அமைந்திருக்கிறது.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : மதம் மாறிய கிறிஸ்துவ ஹரிஜனங்கள், மதம் மாறாமல் இருக்கிற ஹரிஜனங்கள் ஆகிய இரண்டு பேர்களிடத்திலும் பார்த்தால் அவர்களைவிட இவர்கள் என்ன தாழ்ந்து இருக்கிறார்கள் அல்லது உயர்ந்து இருக்கிறார்கள் என்று புரியவில்லை. அதற்கு விளக்கம் சொல்ல முடியுமா?

கனம் திரு. பூ. கக்கன் : விளக்கம் மத்திய சர்க்காரிடத்தில்தான் கேட்கவேண்டும்.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி : நேற்றைய தினம் வரையிலும் இந்து ஹரிஜனாக இருந்து இன்று கிறிஸ்துவ மதத்தில் அவன் சேர்ந்து விட்டதனாலே எந்த வகையில் பொருளாதாரத் துறையில் உயர்ந்து விட்டான் என்று புரியவில்லை. மதம் மாறிய ஹரிஜனங்களுக்கு இந்தச் சலுகைகள் கிடையாது என்று வைப்பதனாலே இந்த அரசாங்கம் மதமாற்றத்தைத் தடுக்க வேண்டும் என்று கருதுகிறதா?

கனம் திரு. பூ. கக்கன் : மதமாற்றத்தைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கம் அரசாங்கத்திற்கு இல்லை. அவரவர்கள் அவரவர்களுடைய உண்மையான மதத்தைப் பின்பற்றி நடக்கவேண்டும் என்றுதான் விரும்புகிறது. கான்ஸ்டிட்யூஷனில் அப்படிக் கொடுப்பதற்கு வகையில்லை. நம்முடைய சர்க்கார் நிதியின் கீழ் வரும் திட்டங்களைப் பொறுத்த வரையில் எல்லாச் சலுகைகளும் அளித்துக்கொண்டுதான் வருகிறோம்.

திரு. கே. டி. கோசல்ராம் : மதம் மாறிய ஹரிஜன கிறிஸ்தவர்களுக்குக் கொடுக்கிற மாதிரி. மிகவும் பிற்பட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் மதம் மாறியிருந்தால், மிகவும் பிற்பட்ட

2nd November 1966]

இனத்தவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சலுகை இவர்களுக்கும் கொடுக்கப் படுகிறதா? அப்படிக் கொடுக்காவிட்டால் இனியாகிலும் அப்படிக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு பூ. கக்கன்: பாக்வேர்ட். மோஸ்ட் பாக்வேர்ட் இனத்தவர்கள் மதம் மாறியிருந்தால் அவர்களுக்கு இப்போது சலுகை கொடுப்பதில்லை. இதுபற்றி நன்கு பரிசீலனை செய்து தான் இப்படி முடிவு எடுக்கப்பட்டது.

திரு. நா. இராசாங்கம்: கனம் சபாநாயகர் அவர்களே, தாழ்த்தப்பட்டவர்கள் மதம் மாறுகிற காரணத்தினால் அவர்களுக்குச் சலுகை இல்லை என்பது சரியாகாது. முன்பு இருந்த நிலையிலே தான் அவர்கள் இருக்கிறார்கள். அதே தெருவில்தான் இருக்கிறார்கள். மதம் மாறியவர்களுக்கும் கொடுக்க ஏற்பாடு செய்வார்களா?

கனம் திரு. எம். பக்தவத்சலம்: கனம் சபாநாயகர் அவர்களே, பிற்போக்கான நிலைமையைப்பற்றி அரசாங்கம் கவனம் செலுத்தாமல் இல்லை. எந்தச் சமயத்தைச் சார்ந்தவர்களாக இருந்தாலும் பிற்போக்கான நிலையில் உள்ளவர்களுக்கு உதவி செய்யவேண்டும் என்பதுதான் இந்த அரசாங்கத்தின் கொள்கை. பிற்போக்கானவர்கள் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகிறார்கள். பாக்வேர்ட், மோஸ்ட் பாக்வேர்ட் என்பதாகப் பிரிக்கப்பட்டிருக்கிறார்கள். அதைத் தவிர, இந்து சமயத்தைப் பொறுத்தவரை தீண்டப்படாதவர்கள் என்று இருந்தார்கள். கிறிஸ்துவ மதத்தைப் பொறுத்தவரையில் தீண்டப்படாதவர்கள் என்பதே கிடையாது. பாக்வேர்டாக இருக்கலாம், மோஸ்ட் பாக்வேர்டாக இருக்கலாம். இந்து சமயத்தில் தீண்டப்படாதவர்கள் என்று இருந்தவர்களுக்குச் சில சலுகைகள் அளிப்பது என்று அரசாங்கம் செய்திருக்கிறது. மதம் மாறியவர்களிடத்திலே தீண்டப்படாத தன்மை என்பது இல்லை, பொருளாதாரத்துறையில் பிற்போக்காக, மிகவும் பிற்போக்காக உள்ளவர்கள் என்ன என்ன சலுகைகளைப் பெறுகிறார்களோ அவற்றை இவர்களும் பெறுகிறார்கள்.

திரு. கே. டி. கோசல்ராம்: சார், இந்த ராஜ்யத்திலே கன்னியாகுமரி ஜில்லாவிலே மதம் மாறிய கிறிஸ்தவர்களாகிய பாவர் என்ற பிஷர்மென் கம்யூனிட்டிக்குப் பல சலுகைகள் கொடுக்கப்படுகின்றன. அந்தச்சலுகைகள் கன்னியாகுமரி ஜில்லாவைத் தவிர மற்ற ஜில்லாக்களில் அப்படி இருக்கக்கூடியவர்களுக்குக் கொடுக்கப்படாமல் இருப்பதற்குக் காரணம் என்ன? அங்கே கொடுக்கப்படும் சலுகைகளை இதர ஜில்லாக்களில் உள்ளவர்களுக்கும் விஸ்தரிக்க சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்ளுமா? முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்பொழுது கிறிஸ்தவர்கள் மதம் மாறிய பின்னால் ஜாதி பாகுபாடு இல்லை என்று சொன்னார்கள். என்னுடைய ஜில்லாவைப் பொறுத்தவரையில் நான் எடுத்துக்காட்ட முடியும். அங்கே இருக்கக்கூடிய சர்ச்-களை எடுத்துக்கொண்டால், வடக்கன் குளம் போன்ற சில ஊர்களிலுள்ள சர்ச்சுகளில் பிள்ளைமார்களுக்குத் தனியிடம்,

நாடார்களுக்குத் தனியிடம், ஹரிஜனங்களுக்குத் தனியிடமென்று இருக்கிறது. கிறிஸ்தவர்களாக ஆகி விட்டதில் அவர்களிடம் மாறுதல் ஒன்றுமில்லாமலிருப்பதால், கன்னியாகுமரி ஜில்லாவில் கிறிஸ்தவர்களாக உள்ளவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கும் பொழுது என்மற்ற ஜில்லாவிலுள்ளவர்களுக்கும் கொடுக்கக் கூடாது என்றுகேட்க விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன் : எல்லா மதங்களும், கிறிஸ்தவ மதமும், புனிதமான மதங்கள்தான். ஆனல் கனம் அங்கத்தினர் சொல்லியதிலிருந்து அந்த மதத்தைக் கொஞ்சம் குறைத்துப் பேசுகிறார்கள் என்று நினைக்கிறேன். ஏனென்றால் அந்த மதத்தில் வெவ்வேறாகப் பிரித்து வைக்கிறார்கள் என்று சொன்னாலே அதுதானே அர்த்தம்? கன்னியாகுமரி ஜில்லாவைப் பொறுத்த வரையில் கிறிஸ்தவர்களுக்குச் சலுகைகள் கொடுக்கிறார்கள். காரணம், அந்தப் பகுதியைத் திருவனந்தபுரம் ராஜ்யத்திலிருந்து இணைக்கும்பொழுது என்ன சலுகைகள் கொடுக்கப்பட்டனவோ அவற்றையெல்லாம் கொடுக்கவேண்டுமென்பது ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகவே தான், அந்த முறையிலே கொடுக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. டி. கோசல்ராம் : அந்த ஜில்லாவில் மாத்திரம் அந்தச் சலுகைகள் கொடுக்கப்படும்பொழுது, இதர ஜில்லாக்களுக்கும் ஏன் அந்தச் சலுகைகள் கொடுக்கக்கூடாது என்பதுதான் என் கேள்வி. ஆகவே, கனம் முதலமைச்சர் அவர்கள் இதை சிம்பதடிக்காகக் கன்ஸிடர் பண்ணவேண்டுமென்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

(பதில் இல்லை).

House-sites for Backward Communities

* 321 Q.—Sri C. CHIRANJEEVULU NAIDU : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether there is any proposal under the consideration of the Government to provide house-sites to Backward Communities who do not have house-sites; and

(*b*) if so, the particulars thereof?

The Hon. Sri P. KAKKAN : (*a*) & (*b*) A statement[a] is placed on the Table of the House.

திரு. க. ர. நல்லசிவம் : அமைச்சர் அவர்கள் கொடுத்திருக்கக் கூடிய பதில் கொள்கைப் படலமாகவே இருக்கிறது. வருகின்ற காலத்தில் நிலமில்லாது இருக்கக்கூடியவர்களுக்கு வீடுகள் கொடுக்கக்கூடியதைப்பற்றித்தான் சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது சமூகத்திலே பின்தங்கியவர்களாக, பொருளாதாரத் துறையிலே பின்தங்கியவர்களாக உள்ளவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கவேண்டும். புறம்போக்கு நிலங்களிலே அவர்கள்

[a] Printed as Appendix IV on pages 102-103.